# கல்வி எனது உரிமை
# Education is My Right

அ. கார்ட்டர் ஆரோக்கியராஜ் / A. Kartter Arokiaraj[1]

## Abstract

In the words of our ancestral son of soil, Mr.Muthiah," Students who handle books today are the rulers of our nation tomorrow". The world always values the educated community. However, education, which is capable of eradicating the fear of individuals, has been chained and suppressed by selfish miscreants; it has become an exclusively accessible asset to the rich and partiality prevails everywhere. Commercialism of education has changed the scenario to the point of denoting education as an unattainable dream for the poor. The transparent truth is that the talented and potential youths, who are the rays of the future, face many hurdles and they struggle for their survival. They are in desperate need of education to elevate their social status and hinder discrimination. Education should not be a commodity to be purchased but a right to be cherished and used in social progression since the ultimate consequence of acquiring education is to have a strong and nurtured self-confidence. These issues about education have been enlightened in the poems published in SARPRASATHA THOOTHAN, a weekly magazine. This research aims to analyse these poems in detail.

Date of submission: 2020-09-26
Date of acceptance: 2020-12-20
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name: A. Kartter Arokiaraj
Email: jibinjzy@gmail.com

**Key Words:** ancestral son, selfish miscreants, commercialism of education, talented and potential youth, strengthen self-confidence.

### முன்னுரை

இன்றைய சூழ்நிலையில் கல்வி இளைஞர்களைக் கடனாளியாக்குகிறதே தவிர முதலாளியாக்குவதில்லை. அந்தக் கடன் சுமை அவர்களிடத்தில் ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்துகிறது என்பது ஒரு சமூக யதார்த்தமாகிறது. இதற்கு இன்றைய கல்வி முறையில் காசுபுகுந்தது மிகப்பெரிய காரணமாக அமைகின்றது. அரசின் சட்டங்கள் இங்கு மறைக்கப்படுகின்றனவா? அல்லது ஏட்டளவில் தான் சட்டங்களா? என்ற கேள்வியும் எழுகின்றது. சமூகத்தில் நடக்கும் இத்தகு நிலைகளைக் கண்டறிந்து குறைபாடுகளைக் களைந்திடுதல் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு வலு சேர்க்கும். அனைவருக்கும் கல்வி பொது; என்றும் கல்வி ஒருவரின் உரிமை என்றும் சட்டத்தின் வழி நிறுவிடக் கடமைப்பட்டவர்களாகின்றோம். வானம் போன்ற வாழ்வில் வானவில்லாய் வந்து போகின்ற வாலிபப் பருவம், எதிர்காலத்தை நிர்ணயிக்கும் 'வலிமைமிக்க பருவம்' என்பதை அழுத்தமாகப் பதியச் செய்வதில் சமூகத்திற்குத் தலையாய கடமை உள்ளது.

### ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வானது அறிவியல் ஆய்வு நெறிமுறை (Scientific Method) அடிப்படையில் அமைந்துள்ளது. இங்ஙனம் கூர்ந்து நோக்குவதும், அதனால் நாம் கண்ட தகவற் புள்ளிகளைத் தொகுப்பதும் அவையனைத்தினூடே மறைந்திருக்கும் ஒரு பொதுமையைக் (generalization)

[1] The author is a Teacher at St.Michael's HSS, Coimbatore, TN, Inida. jibinjzy@gmail.com

காண்பதும் அதனால் ஒரு விதியினை (நீணீஷ்) நாம் பெறுவதும் அறிவியலாய்வின் வளர்ச்சிப்படிகளாகும்.

அறிவியல் முறையே எல்லோராலும் பின்பற்றப்படுகிறது. எனவே செய்முறைக்குறிப்பு (skeleton of procedure) ஒன்று ஒவ்வோராய்விலும் இருந்தாக வேண்டும். அக்குறிப்பு ஆய்வாளன் நன்கு செயல்படுவதற்கு உதவும். பிற ஆய்வாளர்கள் தொட்டுத் தொடங்குவதற்கு வழிகாட்டும். அப்படிப்பட்ட செய்முறை கீழ்க்கண்ட படிநிலைகளைக் கொண்டதென்பர்.

1. ஆய்விற்குத் தேவையான கருதுகோளை (hypothesis) முறைப்படுத்திக் கூறுதல் (formulation).
2. நன்றாகக் கவனித்துத் தொகுக்கப்பட்ட மெய்ம்மைகளைப் பதிவு செய்தல் (collection and recording facts of observation).
3. மேற்கண்ட மெய்ம்மைகளைப் பகுப்பாய்தல் (classification).
4. அவ்விதிகளைப் பொதுமைப்படுத்திப் பார்த்துக் கிடைக்கும் முடிபுகளைக் கூறுதல் (generalization).

இலக்கியத்திலும் அறிவியலாய்வு முறையைப் பின்பற்றிப் பல புதுமைகளைச் செய்து வருவதை ஒப்பீட்டுத் துறையில் இன்று காண்கிறோம்.

**கல்வி குறித்து மகாத்மா காந்தியின் கூற்று**

சரியான கல்வி என்பது என்ன என்று மக்கள் அறியாது இருப்பதுதான் உண்மையான இடர்பாடு. நாம் நிலத்தை மதிப்பிடுவது போலவும், பங்குச்சந்தையில் உள்ள பங்குகளைக் கணக்கிடுவது போலவும்தான் கல்வியையும் மதிப்பிடுகிறோம். மாணவன் கூடுதலாகப் பொருளீட்டக் கூடிய ஒரு வகைக் கல்வியை மட்டும்தான் கொடுக்க விரும்புகிறோம். கற்றவர்களின் நடத்தையை உயர்த்தும் வகையை நாம் ஒருபோதும் சிந்திப்பது இல்லை என்று கூறியுள்ளார்.

**கல்வி குறித்துப் பெரியாரின் கூற்று**

பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளைக் கல்வி கற்க வைப்பதன் காரணம், தன் பிள்ளை புத்திசாலி ஆகவேண்டும், அறிவாளியாக வேண்டும் என்று வெளியில் மட்டும் கூறுவார்களே தவிர, உள்நோக்கமெல்லாம் பையன் உத்தியோகத்திற்குப் போய்ச் சம்பாதித்தால் நம் வாழ்க்கையைக் கஷ்டமன்றிக் கழிக்கலாம் என்பதற்குத்தான்." (தொ.2, பக்.1170)

கல்வி பொருளீட்டுதல் என்ற வகையிலேயே பெரும்பாலும் போதிக்கலாகின்றது. அதனால் கல்விச் சந்தையில் முதலீடு செய்துவிட்டு, கற்ற கல்விக்கேற்ற வேலையை எதிர்நோக்கி இளைய தலைமுறையினர் ஏங்கித் தவிப்பது காணலாம். கல்வியறிவு மட்டுமல்ல; பகுத்தறிவும், பிறருக்கு ஊறு விளைவிக்காத நல்லறிவும் மனிதனின் நல்வாழ்வுக்குத் தேவை என்பதும் நாம் இளையோர்க்குக் கற்பிக்க வேண்டியனவாகும். அவ்வக்காலங்களில் சமூகத்தில் புரையோடிக் கொண்டிருக்கும் இத்தகைய அவலநிலைகளைக் கவிஞர்கள் தங்களின் கவிதைகளின் மூலம் இடித்துரைக்கின்றனர். அங்ஙனம் கோவை மறைமாவட்டக் கத்தோலிக்க வார இதழான சற்பிரசாத தூதனில் வெளிவந்த கவிதைகள் சமூக அவலநிலையைச் சுட்டிக் காண்பித்து அவற்றை எவ்வாறு களைந்திடலாம் என்றும் இளையோர்க்கு தன்னம்பிக்கையைத் தூண்டுவதாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

**ஓசையில்லாத ஒரு புரட்சி :**

*அறுவடைக்காலம்*

*"பட்டதாரியாய்*
*உலாவரும் பசுமைக் காட்சி காண*
*தேய்கின்ற நிலவாய்*
*விலா எலும்பு புடைக்க*
*எத்தனை வயிறுகள்*
*பட்டினி கிடக்க*
*எத்தனை விழிகள் இரத்தம் சிந்த?...*
*ஓ...! அறுவடைக்காலம் நடக்கிறது*
*நடக்கட்டும்"*

*(மரியவிசுவாசம், 1986, றி.4)*

சுதந்திர இந்தியாவில் பெற்றோர் தம் தலைமுறையில் முதல் பட்டதாரியை உருவாக்கிட, தம் தாழ்நிலை உயர்ந்திட பிள்ளைகளைப் பள்ளி, கல்லூரிகளுக்கு அனுப்பிட முனைகின்றனர். வயிற்றுப் பிழைப்புக்கே அல்லாடும் ஏழைகளுக்கு கனவிலேயே கல்வி முடிந்துவிடுகிறது. எல்.கே.ஜி முதல் உயர்கல்வி வரை கல்வி இன்று வணிகமயமாக்கப்பட்டுக் கிடக்கிறது.

கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த அதிவீரராம பாண்டியர் பிச்சையெடுத்தேனும் கற்க வேண்டுமென்கிறார்.

*"கற்கை நன்றே கற்கை நன்றே*

*பிச்சை புகினும் கற்கை நன்றே"* (வேற்கை 35)

என்ற வரிகள் வறுமையில் வாடினாலும் கல்வி கற்பதை விடுதல் கூடாது, பிச்சை எடுத்தாவது நற்கல்வியை அடைதல் வேண்டும் என்று கூறுவது நோக்கத்தக்கது.

தனியார் பள்ளி, கல்லூரிகள் மக்களிடம் பணம் பறிக்கும் செயலிலேயே பல நேரங்களில் ஈடுபடுகின்றனர். இதற்கு அரசுப் பள்ளிக்கல்வியின் திருப்தியற்ற தரமே முதற்காரணியாக அமைகின்றது. இதனால் ஏழைகளின் கல்வி பாதியிலேயே நின்றுவிடுகின்றது. தங்களின் நிலை மாறிட ஏதேனும் வழி பிறந்திடாதோ என்ற பெற்றோரின் வேதனையைக் கவிஞர் தம் வரிகளில் கொட்டித்தீர்க்கிறார்.

**பள்ளிக்கல்வியின் திருப்தியற்ற தரத்திற்கு பல காரணிகள்**

1. அதிக அளவிலான பள்ளிகள், பள்ளிக்கென பரிந்துரைக்கப்பட்டிருக்கின்ற விதிகளையும், தரத்தையும் பின்பற்றாமல் இருத்தல்.
2. மாணவர், ஆசிரியர் வராதிருத்தல்.
3. ஆசிரியரின் தூண்டுதலுக்கும் பயிற்சிக்குமான அதிக இடைவெளி.
4. ஆசிரியரின் தரம் மற்றும் செயல்பாடுகளில் குறைகளை உண்டு பண்ணுகிறது.
5. கல்வியில் செய்தி மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் உள்ள நிதானமான முன்னேற்றம்.
6. செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதிலும் மேற்பார்வையிடுவதிலும் போதிய கவனம் செலுத்தாமை.

நல்ல கல்வியினை வழங்குவதில் அரசு அமைப்பில் உள்ள பள்ளிகள் தோல்வியடைந்திருக்கிறது என்ற எண்ணம் அதிக அளவிலான தனியார் பள்ளிகளின் நுழைவை அதிகரித்திருக்கிறது. அவற்றில் பல பள்ளிகளில் போதிய அளவு அகக்கட்டமைப்புகள், கற்றல் சூழ்நிலை மற்றும் திறன்வாய்ந்த ஆசிரியர்கள் இல்லை. (வரைவு NEP 2016 உள்ளீடுகள் P.14)

**கல்வி உரிமைச் சட்டம்**

ஓசையில்லாத ஒரு புரட்சிக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளது உச்சநீதிமன்றம். கல்வி உரிமைச் சட்டம் செல்லும் என்று அது அண்மையில் தீர்ப்பளித்திருக்கிறது. அதன் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிரிவினருக்கு 25 சதவிகித இடங்களை அவர்களிடம் கட்டணம் பெறாமல் ஒதுக்க வேண்டும் என்றும் அறிவித்திருக்கிறது. இது மத்திய, மாநில மற்றும் எல்லாக் கல்வி அமைப்புகளுக்கும் கீழ் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளுக்கும் பொருந்தும் எனவும் அது தெரிவிக்கிறது. இதன் காரணமாக சமூகத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மாணவர்கள், வசதிமிக்க மாணவர்கள் பெறும் கல்வியை அதே வகுப்பறையில் அவர்களோடு சரிநிகர் சமானமாக அமர்ந்து பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. காசுக்கேற்ற சரக்கல்ல கல்வி அது வாழ்வதற்கான உரிமை என்பதை அழுத்தம் திருத்தமாக உறுதி செய்திருக்கிறது உச்சநீதிமன்றம்.

(புதிய தலைமுறை இதழ், 26.04.2012, P.3)

**தடங்களே! வெற்றித்தடங்கள்**

**சோதனையாளர்கள்**

*"கோவிலான*

*கல்லூரிதனை*

*சந்தைக் காடாக்கி விட்டு*
*வயதுகளை வளர வைத்து*
*பட்டமெனும்*
*பரிவட்டத்தோடு*
*பவனி வருகிறோம்*
*நாங்கள் யார்?*
*ஏதாவது சாதனையாளர்களா?*
*(கோட்டை ஜேசீஸ், 1996, P.4)*

கல்லூரிக்குச் செல்வதை இலட்சியமாகக் கொண்டு, கோவிலாக நினைத்த கல்லூரிக்குச் சென்றால் அங்கு கல்வி சந்தைப்படுத்தப்பட்டுக் கிடக்கின்றது. கல்வியானது விலைபேசி விற்கப்படுகிறது. யார் அதிகம் காசு கொடுக்கிறார்களோ அவர்களுக்கே முன்னுரிமை என்ற நிலை இன்று நிதர்சன உண்மையே. இவற்றையெல்லாம் மீறி கல்வி கிடைத்தாலும் பட்டம் என்னவோ பரிவட்டமே ! ஆனால் படிப்பிற்கு ஏற்ற வேலை கிடைத்ததா என்றால் இல்லை. தவறு எங்கு நடந்தது என்று யார் கண்டுபிடிப்பது. காசுக்கேற்ற கல்வி, விழிப்புணர்வு இல்லாத கல்வி, கற்கும் கல்விக்கும் நிகழ்கால வேலைவாய்ப்புகளுக்கும் தொடர்பின்மை, தன் நாட்டுக் குடிமக்களுக்கு உத்திரவாதமான அடிப்படை உரிமை போன்ற காரணிகளுக்குத் தெளிவு கொடுக்கவேண்டியது நல்லரசின் கடமையல்லவோ. அரசு தன் கடமையில் தவறினாலும் சாமானிய மக்கள் தம் வாழ்வில் என்றேனும் ஒளி பிறக்காதா என்று சாதிக்கக் காத்து நிற்கின்றனர். தகுதி, திறமை இருக்கும் இளைய தலைமுறையினருக்கு வேலைவாய்ப்பினை வழங்குவது நல் அரசின் கடமையே! என்ற ஏக்க வரிகள் கவிதையில் வெளிப்படுவது காணலாம்.

*“வேலை கொடு*
*அல்லது*
*நிவாரணம் கொடு*
*என்று*
*வீதியெல்லாம் முழங்கி வரும்*
*இளைஞர்களுக்கு*
*அவர்கள்*
*பதில் சொல்ல வேண்டியிருக்கும்’’*
*(அந்தோணி செல்வக்குமார், 2013, P.8)*

வேலையில்லா இந்த இளைஞர்கள் சிம்மாசனம் கேட்கவில்லை. வேலை என்ற ஊன்றுகோல் கேட்டுத்தான் ஓலமிடுகிறார்கள். அவர்கள் இப்போது வாழ்வதெல்லாம் வாக்காளர் பட்டியலில் மட்டும் தான். அதிலும் சிலர் விடுபடப்போகிறார்கள். இத்தகைய நிலைமைக்கெல்லாம் காரணமாக இருக்கக்கூடியவர்கள் ஆட்சியாளர்களே என்று எச்சரிக்கை விடுப்பதாய் அமைவது காணலாம்.

*“நம்பிக்கை நார்மட்டும்*
*நம் கையில் இருந்துவிட்டால்*
*உதிர்ந்த பூக்களெல்லாம்*
*ஒவ்வொன்றாய் வந்து*
*ஒட்டிக் கொள்ளும்!*
*கழுத்தில் வெற்றி*
*மாலையாகவும்*
*சுற்றிக் கொள்ளும் (இறையன்பு I.A.S., 2016, P.67)*

தடைகளைத் தகர்த்தெறிந்து வெற்றிப்படிக்கற்களாக மாற்றுவதற்கும்; தடங்கல்களை வெற்றித்தடங்களாக மாற்றுவதற்கும் தன்னம்பிக்கை ஒன்றே போதும் என்று இறையன்பு அவர்கள் தன் வார்த்தைகளில் வலுவூட்டுகிறார்.

**மனது வைத்தால் மலையும் நகரும்**

**பட்டதாரி ஏழைகள்**

*“இவர்கள்*
*இல்லாத ஊருக்குப்*
*போகாத பேருந்தில் ஏறிக்கொண்டு*
*இறங்கவா? இறங்கவா?*
*என்று யோசித்துக் கொண்டிருக்கும்*
*பேதைகளாகிப் போனவர்கள்*
*இவர்கள்*
*பல்கலைக்கழகங்கள்*
*வேண்டாம் என்று துப்பிய எச்சில்களானார்கள்*

*இவர்களின் இலக்குகள் இடம் தெரியாமலேயே*

*இல்லாது போய்விட்டது.” (கோவை நிலவன், 1989, றி.5)*

இன்றைய படித்த இளைஞர்களின் வாழ்க்கை துன்ப துயரம் நிறைந்ததாக இருக்கக் காரணம் வேலைவாய்ப்பின்மையே. இதனால் சிலர் இச்சமூகத்தின் மீது கோபமும், சீற்றமும் உடையவர்களாக மாறிவிடுகின்றனர். இந்தியாவின் எந்த ஓரத்திலும் இவர்களை எப்பொழுதும் சந்திக்கலாம். வறட்சி மிகுந்த முகம், வெறிச்சோடிய விழிகள், நம்பிக்கையிழந்த நடை என இலக்குகள் தெரியாமல் அலைபவர்கள் என இவர்களைக் கவிஞர் இனம் காட்டுகிறார்.

மனிதன் சுதந்திரமாக வாழ்வதற்குப் படைக்கப்பட்டுள்ளான். இந்த நிலையில் ஒரு மனிதன் இன்னொரு மனிதனையோ, ஒரு அரசு குடிமக்களையோ, ஒரு இனம் இன்னொரு இனத்தையோ, ஒரு நாடு இன்னொரு நாட்டையோ ஒடுக்குவதற்கு எந்தவிதமான உரிமையும் வழங்கப்படவில்லை. எனவே அவ்வாறு ஒடுக்க முனைந்தால் அதனை எதிர்த்துப் போராடும் உரிமையும் ஒடுக்கப்படுவோருக்கு உண்டு. *(தேவசகாயம், 2000, றி.3)*

“வேகத்தடைகள் ஓட்டத்தை மட்டுப்படுத்துகின்றன; மனத்தடைகளோ வெற்றியைக் கட்டுப்படுத்துகின்றன”.

“தன்னினும் வலிய யானையைப் பாகன் வழிநடத்துவது போல, நம்மினும் பெரிய தடைகளை நாம் நகர்த்த முடியும்”.

என்ற வரிகளில் இளைஞர்கள் செல்ல வேண்டிய பாதையைச் சீரமைக்கின்றார்; அத்துடன் மனது வைத்தால் மலையைக் கூட நகர்த்தலாம் என்றும் மரபின் மைந்தன் முத்தையா கூறுவது இளைஞர்களுக்க வெளிச்சம் காட்டுவதாய் அமைவது காணமுடிகிறது *(முத்தையா, 2011, P.58).*

**நம்பிக்கை உரம் :**

**கண்ணில் தெரியுது புதுயுகம்**

*“போகட்டும் விடு*
*கண்ணீரில் கரைந்து போன*
*நேற்றைய காலத்தின்*
*நிழற் கனவுகளை*
*நாளைய விடியலுக்கு*
*நம்பிக்கை உரமாக்குவோம்!*
*சுகங்களைச் சுமந்து கொண்டு*
*எதிரே நின்று முறுவலிக்கும்*
*புன்னகை வினாடிகளின்*
*கரம் பற்றிக்*
*கை குலுக்குவோம்!*
*அலட்சியங்களால்*
*அஸ்தமனமாகிப் போன*
*இளைய மனங்களை*
*உதய நிலவுகளின்*
*தர்சனைப் பூமியாக்குவோம்!*
*சரித்திரங்களைப்*
*படிப்பது மட்டுமல்ல*
*படைக்கவும் முடியுமென்பதைச்*
*சாதித்துக் காட்டுவோம்!*
*நம்பிக்கையின் அடையாளமாய்*
*உயர வேண்டிய கைகள்*
*நடுக்கத்தோடு*
*மரணத்தின் வாசலைத்*
*தட்டிக் கொண்டு இருப்பதா? (கிளேடர் கென்னடி, 1989, P.7275)*

மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் உடலைப் பாதிக்கும். ஆனால், மதுவும், கஞ் சாவும் உடலோடு சேர்ந்து ஆன்மாவையும் பாதிக்கும் என்று கூறிய காந்தியடிகள், “நான் இந்திய நாட்டில் ஒரு மணி நேரமாவது சர்வாதிகாரியாக வாய்ப்புக் கிடைத்தால் அந்த நேரத்திற்குள் நாடு முழுவதிலும் மதுவிலக்கை அமலுக்குக் கொண்டு வந்துவிடுவேன்” என்றார் *(ஜான் பெல்லார்மின், 2000, P.189)*

“மண்ணில் புதைக்கப்பட்ட விதைகள் தான் முளைக்கும். எண்ணங்களும் விதைகளைப் போன்றவை தான். அவை உள்ளம் என்ற மண்ணில் நட்டு, ஊக்கம் என்ற உரமிட்டு, செய்கை என்ற நீரை ஊற்றி வந்தால் அவை

*சாதனைகள் என்ற பெரிய செடிகளாக உருவெடுக்கும் என்று வெற்றிநோக்கின் வழி பி.எஸ்.ஆர்.ராவ் நெஞ்சில் உரமிடுவது நோக்கத்தக்கது.*

### தொலைநோக்கு இலக்குகளும் நோக்கங்களும்

*தரமான மற்றும் பொருத்தமான கல்வியைப் பேணி வளர்ப்பதுதான் ஒட்டுமொத்த இலக்காக இருக்கிறது. இதில் இந்தியக் கல்வி அமைப்பின் நம்பகத் தன்மையை அதிகரிப்பதும், பள்ளி மற்றும் உயர் கல்வி பயின்ற மாணவர்களிடையே பணிக்குச் செல்வதற்கான தகுதியை மேம்படுத்துவதும், கல்வியை அனைவருக்கும், அதாவது குழந்தைப்பருவக் கல்வியிலிருந்து கல்லூரிக்கல்வி வரை, சமநிலையில் எளிதில் கிடைப்பதை உறுதிசெய்வதும், அதில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்படிப்பும் பயிற்சியும் மேலும் அவர்களுக்கு வாழ்நாள் முழுவதற்குமான கற்றல் வாய்ப்புகளை வழங்குதலும், சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் கல்விக்கான வாய்ப்புகளைக் கிடைக்கச் செய்வதை உறுதி செய்வதும் அடங்கும் (வரைவு NEP 2016 உள்ளீடுகள், P.29).*

### முடிவுரை

*கல்வியறிவானது நுண்ணறிவு பெறுவதற்கு மட்டுமல்லாது இப்பிறவிக்கு நன்மை சேர்க்கும் செல்வத்தினைப் பெறுவதற்கும், மறுபிறவிக்கு இன்பத்தினைச் சேர்க்கும் அறத்தினைச் செய்வதற்கும் தேவையாகின்றது. “ஒவ்வொரு தோல்வியும் ஒவ்வொரு பின்னடைவும் அதற்கு இணையானது அல்லது அதைவிடவும்*

*அதிகமான ஆதாயத்தின் விதையாகத்தான் விழுகிறது” (நெப்போலியன் ஹில், P.70) என்பதை இளைஞர்கள் அறிந்து, இன்றைய சமுதாயத்திற்குத் தேவையான பொறுப்பினை உணர்ந்து வாழ்க்கையை வாழ்ந்து தான் பார்ப்போமே! என்ற தன்னம்பிக்கையோடு விடாமுயற்சி செய்தால் கல்விக்குத் தடையேதும் இல்லை. உலகமே உன் வசம் என்பதில் வியப்பேதுமில்லை இளைஞனே!*

## References


Antony Selvakumar, S, (2013). *Geetham Paadiya Vanampadikkuyil*). Madurai: Tamiliyarpuzham.

Devasagayam, E. (2002). *Manitha Urimaik Kalvi Manavar Kaiyeedu.* Manitha Urimaikkalvi Nilayam.

Draft NEP. *Ullidukal* (2016). Indian Govt.: Human Resources Department.

Draft NEP. *Ullidukal* (2016). Indian Govt.: Human Resources Department.

Erode Maria Visuvasam. *Aaruvadaikkalam* (1986). Coimbatore: St. Joseph’s Press.

Gleder Kennady, K. (1989). *Kannil Theriyuthu Pudhu Yugam*. Coimbatore: St. Joseph’s Press.

Irai Anbu, V. I.A.S. (2016). *Vazhkaiye Oru Vazhipadu.* Coimbatore: Vijaya Pathippagam.

John Bellourmin. (2000). *Idithu Thagarkkave*.

Kottai Jesis. *Sodhanaiyalargal* (1980). Coimbatore: St. Joseph’s Press.

Kovai Nilavan. (1986). *Pattathari Yezhaika.l* Coimbatore: St. Joseph’s Press.

Marabin Maindan Muthaiah. (2011). *Manathu Vaithal Malaiyai Nagarthalam.* Coimbatore: Vijaya Pathippagam.

Neppoliyan Hill. *Vazhkai Yenna Vallnthuparkkalam*.

*Puthia Thalaimurai Ithal* (2012).

Rao, P.S.R., *Vettri Nokku*.